DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் சரவணன் (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் )**

முதல் விசாரணை **Date : 03.03.2026**

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேராசிரியராக பணியுரிந்து வருகிறேன். நான் கடந்த10.02.2021ம் தேதி காலை 10.20 மணிக்கு நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்தேன்.

அப்போது பூங்கொடி என்பவரை அவரது மகள் விசித்திரா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். பூங்கொடியை விசாரித்த போது அவரை 10.02.2021ந் தேதி காலை 08.15 மணிக்கு தனது வீட்டின் அருகே வைத்து தெரிந்த 3 நபர்கள் அடித்ததாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இடது கால் முட்டியில் சிறாய்ப்பு காயம் இருந்தது. அவரை உள் நோயாளியாக சிகிச்சையில் அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

பூங்கொடி என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். பூங்கொடிக்கு எந்த ஒரு வெளிபுற காயமும் இல்லை என்றால் சரியல்ல, இடது கால் முட்டியில் சிறாய்ப்பு காயங்கள் இருந்தது. பூங்கொடி எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் அது பற்றிய ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதம் ஏதேனும் காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. பூங்கொடிக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் சிறாய்ப்பு காயம் ஒரு நபர் தவறி விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**